# தகவல் ஏடு
# உடலியலாமை உள்ளவர்களுக்குக் கிடைக்கும் சேவைகள் மற்றும் திட்டங்கள்

வேலை ஒன்றிற்காக ஆயத்தப்படுத்திக் கொள்ளவும், வேலை ஒன்றைத் தேடியெடுத்து அதைத் தக்கவைத்துக் கொள்ளவும் உடலியலாமை உள்ளவர்களுக்குக் கிடைக்கும் சேவைகளும் திட்டங்களும் பல உள்ளன. இவற்றில் உள்ளடங்குவன:

**'ஊதியத் தள்ளுபடிகள்' (Wage Subsidies)** எனும் திட்டம் உடலியலாமை உள்ளவர்களுக்கு வேலை கொடுக்கும் சாத்தியமுள்ள பணியமர்த்துனர்களுக்கு கூடுதல் ஊக்கத்தொகை அளிக்கிறது

**'பணியிடத்திலான தனிநபர் ஒத்தாசை' (Work Based Personal Assistance)** எனும் திட்டத்தினால் தமது உடலியலாமை அல்லது மருத்துவ நிலை காரணமாக தொடர்ந்த உதவி தேவைப்படும் நபர்களுக்கு பணியிடத்தில் தேவைப்படும் ஆதரவு சேவைகளுக்கான செலவுகளைக் கொடுக்க இயலும்.

**'போக்குவரத்துப் படித்தொகை' (Transport Allowance)** என்பது உங்களால் பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பாவிக்க இயலவில்லை என்றால், வேலை, படிப்பு, பயிற்சி, சுயவிருப்பத்தொண்டு மற்றும் வேலை தேடல் ஆகிய காரியங்களுக்காக நீங்கள் சென்று வருவதற்கு ஆகும் பயணச்செலவுகளை ஈடுகட்ட உதவும்.

**'வேலைத் திட்டம் ஒன்றை ஏற்பதற்கான இடமாறல் ஒத்தாசை' (The Relocation Assistance to Take Up a Job programme)** எனும் திட்டத்தினால் உங்களுக்கு ஆகும் இடமாறல் செலவுகளை மீளளிப்பு செய்ய இயலும்.

**'பணி இடர்க் கால ஒத்தைசை' (Job in Jeopardy assistance)** எனும் வசதி உங்களுடைய உடலியலாமை, காயம் அல்லது உடல்நல நிலை ஆகியவற்றின் காரணமாக நீங்கள் வேலையை இழக்கும் ஆபத்திலிருந்தால் உங்களுக்குக் கிடைக்கும்.

**'புதிய தொழில்முனைவு ஊக்கத் திட்டம்' (New Enterprise Incentive Scheme)** எனும் திட்டத்தினால் நீங்கள் புதிய சிறு தொழில் ஒன்றைத் துவங்குவதற்கு உதவ இயலும்.

**'தேசிய வேலை அனுபவத் திட்டம்' (National Work Experience Programme)** எனும் திட்டத்தினால் வேலை செய்வதற்கான திறன்கள் மற்றும் தன்னம்பிக்கையை நீங்கள் பெறும் விதத்தில் ஊதியமுள்ள அல்லது ஊதியமல்லாத வேலை அனுபவத்தினை நீங்கள் விரும்பினால் பெற உதவ இயலும்.

**'சமூக அபிவிருத்தித் திட்டம்' (Community Development Programme)** என்பது தொலைதூர அவுஸ்திரேலியப் பகுதிகளில் வேலை செய்வதற்கு நீங்கள் ஆயத்தமாகவும், வேலை தேடவும் உதவுகிறது
**'கல்வி மற்றும் வேலைக்கான திறன்கள்' (Skills for Education and Employment)** எனும் திட்டத்தினால் உங்களது பேசச்சு, வாசிப்பு மற்றும் எழுத்துத் திறன்களையும் அல்லது அடிப்படையான கணிதத் திறன்களையும் வளர்த்துக்கொள்ள உதவ இயலும்.

இச் சேவைகளில் எவ்வொன்றையும் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு, அல்லது உடலியலாமை உள்ளோருக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வேலைவாய்ப்புத் தகவல்களுக்கு 'ஜாப்-அக்ஸெஸ்' (JobAccess) அமைப்பினரது www.jobaccess.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது 'ஜாப்-அக்ஸெஸ்' அறிவுரைஞர் ஒருவரை 1800 464 800 எனும் இலக்கத்தில் அழையுங்கள் - கைப்பேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.

Australian Government

JobAccess is the national hub for workplace and employment information for people with disability, employers and service providers.

**1800 464 800** **www.jobaccess.gov.au**